859

உ

சத்குருவே நம:

திருக்களர்

# தோத்திரத்திரட்டு

இஃது

காம்பக்குடி

ஆ. அ. குமாரசுவாமி பிள்ளையால்

இயற்றி

சென்னை

"கார்டியன் பிரஸில்" பதிப்பிக்கப்பட்டது.

1911

உ

சத்குரவேநம:

திருக்களர்

# தோத்திரத்திரட்டு

இஃது

கரம்பக்குடி

ஆ. அ. குமாரசுவாமி பிள்ளையால்

இயற்றி

சென்னை

"கார்டியன் பிரஸில்" பதிப்பிக்கப்பட்டது.

1911

1887

MADRAS : G. C. LOGANADHAM BROS.,
THE GUARDIAN PRESS, MOUNT ROAD.

68.194

தில்லைவளாகம் சிவானந்தானுபூதி நிலயமடம்

# ஸ்ரீலஸ்ரீ, ஆனந்த ஷண்முகசரணாலய சுவாமிகள்

## இயற்றியன

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உருவோங்கு திருவாச னிம்பர்தவஞ்
செயவுன்னி யும்ப ரேகித்
திருவோங்கு பொன்னுலகிற் றிகழ்ந்தோங்கு
மைந்தருவிற் சிறந்த தாகி
மருவோங்கு பாரிசா தத்தருக்கள்
பலகொணர்ந்திம் மாநி லத்தோர்
கருவோங்கு ருதுபர கதியோங்கத்
தாபித்தே களிகூர்ந் தானல். (1)

அத்தலத்தி லருவுருவாந் திருமேனி
யமைத்தருச்சித் தமரு நாளிற்
கத்தனெழுந் தவ்வுருவிற் காட்சியளித்
தனன்பின்னர் கந்த வெற்பிற்
சித்தமகிழ்ந் துறைமுனிவ ரறுபதிரு
யிரவருடன் திருமால் வேதன்
புத்தமுத மருந்துசுர ராதியரும்
வரவேற்றுப் புகழ்ந்து நின்றான். (2)

அக்காலத் தெம்பெருமா னமரர்முனி
கணங்களிக்க வகத்தி னோர்ந்து
மைக்காலன் றனையுதைத்த சீரடியந்
தரந்தாக்கி மகிழ்வி னோடு
முக்கால மறிந்ததுரு வாசமுனி
கருதுநட முயன்ற காலை
எக்காலத் திந்நடநாங் கண்டமென
வதிசயித்து யின்பத் தாழ்ந்தார். (3)

அந்நயமா கியபதியா தெனிற்பாரி
சாதவன மாகு மின்னும்
நந்நயமாந் திருக்களர்மந் தாரவன
மெனப்பலவு நவில்வர் நாமம்
எந்நயமு மளிக்கவாங் கெழுந்தருளு
மெம்பெருமா னிணைய டிக்குச்
சொன்னயமும் பொருணயமுந் துலங்கவரு
டோத்திரப்பா சொற்றான் யாவன். (4)

நீராரும் பொன்னிநதி வளம்பெருக்கு
நன்னாட்டி நிலவா நின்ற
காராரும் பொழில்சூழு மருதவன
மெனுநகரிற் கதித்த செல்வன்
ஆராரும் புகழாறு முகம்பிள்ளை
யருந்தவத்தா லவத ரித்தோன்
வராருங் குமரசா மிக்கவிஞன்
தோத்திரப்பா விசைத்திட் டானால். (5)

தெள்ளமுதோ நறும்பாகோ கற்கண்டோ
செங்கரும்போ சீனி தானோ
விள்ளமுதத் தீம்பாலோ முக்கனியோ
வெனப்பலரும் வியந்த யிர்ப்ப
எள்ளரிய குமரசா மிக்கவிஞ
னிசைத்திட்ட வினிய பாக்கள்
தள்ளரிய புகழ்வாய்ந்த திருக்களரீ
சனுக்கேயாந் தகைமைத் தாமால். (6)

காமேவு புலவர நு தினஞ்சார்ந்து
போற்றுதிருக் களரின் மேவுந்
தேமேவு பொழிற்பாரி சாதவனே
சுரர்பாடற் சிந்தித் தோர்க்குத்
தாமேவு மகமினிக்குஞ் சொற்றவர்தந்
நாவினிக்குந் துக ளிலாத
மாமேவு முயிரினிக்கு மதிக்கரிய
வறிவினிக்கு மதிக்கற் பாற்றே. (7)

பத்திவலை யிற்படுவோன் காண்கவென
வடிகள்முனட் பகர்ந்த வாக்கைச்
சத்தியமா யெணுங்குமா சாமியரு
டோத்திரங்க டனையாய்ந் தோரி
னித்தியபே ரறிவாள ரிகழாது
கையேற்றி நீடு வாழ்வார்
எத்தியசிற் றறிவுடையோ ரிகழ்ந்துபவ
சாகரத்தி லெய்து வாரே. (8)

சுபம் சுபம். சுபம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தோத்திரத்திரட்டு

## வலப்புரிவிநாயகர் துதி

திடவரைக ளதிரேழு சலதிகொதிப்
பெழக்கயங்க டயங்கத் தாங்கும்
விடவரவாயி ரத்திரட்டி விழிபிதுங்க
யுகஞ்சுற்றி வீரூர் வெற்புங்
கடலடக்கி யாசான்கைப் பற்றிமுன்
கனிகவரக் கைக்கோர் வில்லாய்
வடவரையைக் கொண்டானை வலம்புரிவி
நாயகரை வணக்கஞ் செய்வாம்.

## ஸ்ரீ பாரிசாதவனேசுரர் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

பொன்னிலகும் பூங்கடுக்கை மௌலி யான்காண்
பூரணன்கா ணாரணன்காண் புலவர் போற்றுங்
கொன்னிலகுஞ் செய்யமலர்ப் பதமுள் ளான்காண்
கொற்றவன்கா ணற்றவன்காண் குணக்குன் றன்கா

ணென்னிதயத் தோங்குமிரு டுறப் பவன்சா
ணெல்லையிலா வகண்டிதன்கா ணெப்ப திக்குஞ்
சென்னியென விலகுதிருக் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (1)

நல்லானை யாவருக்கு நடுநின் றானை
நான்மறையின் பொருளானை நவையின் மேரு
வில்லானை வீணைமுனி கானங் கேட்டு
மிகுமகிழ்ச்சி யடைவானை விறன்மா றர்க்காய்க்
கல்லானை கரும்பருந்தச் செய்தான் றன்னை
கைத்திடுவேம் பெனநலத்தைக் கருது வாருட்
செல்லானைத் திருக்களரி தன்னின் மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (2)

பொங்கரவம் பூண்டவன்காண் பொருதும் வேளைப்
பொடியெழச்செய் விழியினன்காண் புலித்தோ லன்காண்
மங்களஞ்சே ரமுதவல்லி பங்கா ளன்காண்
மணிமிடற்றெம் மிறையவன்காண் மதமூன் றுஞ்சேர்
வெங்கயத்தோற் போர்த்தவன்காண் விதியின் றந்தை
விடையவன்காண் சடையவன்காண் மேவுங் கீதச்
செங்கமலத் தடம்பலசூழ் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (3)

தரித்தான்கா ணறல்பிறையு மால்வே தன்றன்
றலைப்பணியன் காண்சனகா தியநால் வர்க்கு
விரித்தான்காண் விள்ளரிய வேதார்த் தத்தை
விளக்கினன்கா ணிட்டையினால் வேங்கை யின்றோ

லுரித்தான்கா ணிடையதனி லுடுத்தி னன்கா
ணுள்ளார்முப் புரம்பொடிய தாகச் சற்றே
சிரித்தான்காண் மருப்பொழிலார் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (4)

வேந்தனுய் மதுரையிற்செங் கோல்கொண் டானை
வெண்ணகையுந் துவர்வாயும் விருப்பார் சொல்லுங்
காந்தளங்கை யுமையிலகும் பாகத் தானைக்
கண்ணிவைத்த புண்ணியத்தாற் கலிங்க நாட்டிற்
கேந்தலென வேட்டுவனைச் செய்தான் றன்னை
யியம்பருமூ லோக்கிய தீர்த் தாதி நான்கிற்
சேர்ந்தாரின் பவமகற்றுங் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (5)

முச்சிரவேற் கையானை முளரி மேவும்
முனிவனொடு மாலிருவர்க் கரியான் றன்னை
வச்சிரத்தை யெரித்திடப்பின் னிரந்து வேண்டும்
வலாரிதனக் கேமீட்டு மருள்செய் தானை
நச்சரவென் பணிசிரமா லிகையி னானை
நமனடங்க வுதைத்தானை நாகந் தந்தி
செச்சையணி யுமையிலகக் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (6)

புலவருல கிருந்துமுனுட் பாரி சாதப்
பொற்றருவைக் கொணர்ந்துவளர்த் ததன்கீழ்ச் செய்த
நலமருவு தீர்த்தமனு விலிங்கந் தன்னை
நாட்டியவ னெடுங்காலம் பூசித் தேற்ற

மலமொருந்தார் வாசமுனி வணங்கிக் கேட்ட
வாஞ்சபிக்கிற் றவம்பெருக வளித்தே மென்று
திலகமென விலகுதிருக் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (7)

தத்தலையார் கலியிலெழு வமுதின் மிக்கத்
தனிமருந்தே புதுவிருந்தே தன்னே ரில்லாப்
பத்திவலை தனிலகப்பட் டன்றே ரெண்ணம்
பலிக்கவருள் பாலிக்கும் பாலே பாலின்
சித்தமுவந் திடுசுவையே தேனே பாகே
தீங்கரும்பே சர்க்கரைசீ னிக்கற் கண்டே
செய்த்தலைவால் வளைதவழுங் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (8)

கரமுறுவாட் கொடுகனற்கை யறுத்தான் றன்னைக்
களங்களத்தை யுண்டுகளங் கறையா னானை
அரமுறுவேன் மாரதபாண் டியனுள் ளோங்கு
மரங்கைதயடர்த் திருமகவை யருள்செய் தானை
வரமுறுசெல் வியும்பனுவ லாளுமேன்மேல்
மகிழ்வடையத் தண்டமனார்க் கருள்செய் தானைச்
சிரமுறுகை யானைமதிட் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (9)

நித்தியனை நிராமயனை நிகரில் லானை
நேயமுட னெண்கோடி நிதியங் கொண்டு
பத்தியுடன் பணிபுரிமன் பிறவி நோயைப்
பாழாக்கி னானையிராப் பகலா னானை

சுத்திவந்து பன்முனிவர் சூழ்ந்து போற்றத்
தும்புருநா ரதர்முழக்கத் தூர்வா சர்க்குத்
தித்திமியென் ருடல்புரிக் களரி மேவுந்
திருநடப்பெம் மானிருதாட் சிந்திப் பாமே. (10)

திருச்சிற்றம்பலம்.

---

## ஸ்ரீஅமுதவல்லியம்பாள் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

சீர்மேவு நித்தியசுப மங்களாம்
பிகையமலை தேவிமா தாபிராமி
சிங்காரி பரைகௌரி யெண்டோளி
கங்காளி சிற்சபா நடனம்பரி
வார்மேவு செஞ்சடா டம்பரிசி
வைத்தரள வாணிபுக ழுஞ்சாம்பவி
மாதங்கி கௌமாரி நீலியா
மலையிமைய வல்லிநிற் குணிவாகி
போர்மேவு மகிடசங் காரிகா
மக்கோட்டி பெரியநா யகிபகவதி
பீரபாலி யருள்சீலி குணசாலி
யனுகூலி பிரமசிர கரகபாலி
ஆர்மேவு முத்தலைச் சூலிசா
முண்டிகலை யூர்திமுக் கண்ணிமோடி
யரகா சிலாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (1)

செய்யகம லச்சரண வழகுநூ
புரவழகு சேரிடுப் பணிகோசிகச்
சேலையழகுந் தரளமா லையழகும்
பசியசெம் பொன்மாங் கல்யவழகுங்
கையின்மோ திரவளைய லழகுமுயர்
கச்சிலகு கனகதன மேருவழகுங்
களமருவு பீதாம் பரத்தழகும்
விரிசிகைக் காதினொளி ரோலையழகு
மெய்யிலகு வோர்க்கருளும் விழியழகு
மிளநிலா வெழுநகையி னழகுமிகவும்
விகசிதம தானமூக் குத்திப்
புலாக்கழகு மிளிர்நுதலி திலதவழகு
மையமுறு மையளக வழகுமணி
மகுடத்தி னழகுநா னென்றுமறவே
னரகர சிவாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (2)

ஒப்பிலிம வான்றந்து கண்டுகளி
பாக்யமே யொளிமருவு மளிவடிவமே
யோதரிய வேதமுடி வேசித்தர்
யோகிய ருளத்தி லூடாடுமுதலே
தப்பின்மன மேவுபர விற்பன
விவேகமே தமியே னுளப்புதையலே
தமிழின்மிக் கினிமைதரு மதுரமே
தர்க்கமிடு சமயத்தின் மூலதனமே

வற்பினிடு தனதேவ பூமடந்தை
யர்தொழுது வாழ்த்துமங் கலசொரூபமே
வாமிசிவ காமியபி ராமிதயை
நேமியெழின் மன்னுஞ் சகத்ராமி
யற்பினிட் டேடளக வாலைபரா
மானந்தி யடியனேற் கருள்புரிகுவா
யாகர சிவாயவோம் பராதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (3)

பொடிமேவு வடிவத்த னிடமுற்ற
பாதத்தி பொலனுவா மதிமுகத்தி
புராணத்தி மனமாதி கரணத்தி
யிருளஞ்சு வாணத்தி புகழுடைச்சி
படியாளு நெறிமன்னர் கெடிமேவு
முடிதாவு பாதாம் புயத்திபஞ்ச
பாணத்தி யிருநான்கு கோணத்தி
மறையின்பிர மாணத்தி பாலனுள்ளக்
குடியா விருந்தா சியற்றுசெங்
கோலிச்சி கோணாத மொழியுடைச்சி
குணகரி பராபரி நிராதரி
கிர்பாகரி கொண்டல் வண்ணன்சோதரி
அடிமுடியை மாச்சகுன மறியாத
பரமனிட மமரிமைய மாதேயருள்வா
யாகர சிவாயவோம் பராதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (4)

செப்புத் தனத்திசெட் டிச்சிசெந்
திலதத்தி செம்பவள வாயுடைச்சி
செங்கண ரவங்கங் கணத்திபா
சத்தியருள் திவ்யதே சோமயத்தி
கற்புத் தனத்திகம லத்திகங்
காளத்தி கைலாய மேருடைச்சி
காலதண் டத்தியொளிர் நீலகண்
டத்திமிகு கலைவலா ருளாநடத்தி
பற்பத் தலத்தி ஞானத்தி
மோனத்தி செம்பத்ம பாதாம்புயத்தி
பல்லா யிரங்கோடி யண்டமுந்
தந்தாண்ட பட்டத் துரைச்சியலையா
ரப்புச் சடைச்சிநின் சரணத்தி
லுலவுமன மகலாதிருக்க வருள்வா
யாகர சிவாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (5)

கத்தியமு சேயினை யெடுத்தமத்
துவதன்னை கடனாகு மென்னுமொழியிக்
கசடனளவிற் பொய்த்ததோ விசாலாக்ஷி
மீனாக்ஷி சர்வாண்ட சாக்ஷி
முத்திதந் தாளுமோ னத்திசட்
கோணத்தி முப்பத்தி ரண்டறத்தி
மூலத்தி யாலத்தி சாலத்தி
சூலத்தி முக்கண னிடப்புறத்தி

68194

பத்தியொடு பணிபவ ருளத்திநின்
மலத்திவெம் பாசாங்கு சத்தியோகப்
பரைவீரி சுகவாரி நகைமீறி
யருண்மாரி பாவலர்க் கருளுதாரி
அத்திமுக னைப்பெற்ற சத்திசிவ
மாதங்கி யடியனேற் கருள்வதென்றே
வரஹர சிவாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (6)

பாவி யெனையுஞ் சிருட்டித்துச்
சிருட்டித்த பங்கயன் மனஞ்சலித்தான்
பட்சமு டனின்றள வளித்திட்
டளித்துப் பதைத்துமால் கைசலித்தான்
ருவியுயிர் வாங்கவோ யானடை
நடந்துகூற் றஞ்சியிரு வடிசலித்தன்
றனுவெடுத் திதுகாரு மேசலித்
திலனெனிற் றமியனு ணவமதென்றே
சேவிப் பரிதயவம் போருகத்
தொளிர்பாம சிவஞான சிற்சொரூபி
தினமேவி யடிதாவி மலர்தூவி
யெனதாவி தீனனேற் கருள்செய்தேவி
யாவிமுன் னுண்டுசெழி யன்பிரம்
படியுண்ட வண்ணலிட நண்ணுமயிலே
யரஹர சிவாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே (7)

மேலத் தடத்திவே ணிச்சிமெஞ்
ஞானத்தி வெண்ணிலா வெழுநகைச்சி
வேண்டுவார் வேண்டுவ தளிக்கும்
ப்ரமாண்டத்தி வேதசிரக ரதலத்தி
மாலைக் கழுத்திவா ணிச்சிசே
ணிச்சியருள் வட்டத்தி மரகதத்தி
மௌனக் கரத்தியுப நிடதத்தி
நிரதிசய வாசாம கோசரத்தி
ஏலச் சடைச்சியிட் டத்தியே
காந்தத்தி யிமயப் பருப்பதத்தி
யேகாக் கரத்திலீ லாவிநோ
தத்திமா விந்த்ர சாலத்திகொடிய
வாலக் களத்தியெரி யோங்குநாட்
டத்திமன மாசைத் துடைத்தருளுவா
யரஹர சிவாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (8

தாயே பராபரி சதானந்தி
முக்கண்ணி சத்திமெய் யடியார்க்குறுஞ்
சகலவிக் கினமெலா மகலவருண்
மதமேவு தந்திவத னத்தெந்தையும்
வேயே வெலுந்தோளி யர்க்குமங்
கலநாண் வெடுக்கென் றறுந்துமண்மேல்
வீழாம லேசுமங் கலையெனப்
பாலித்த வீரவேற் காளையையுநின்

சேயே யெனத்தூக்கி முத்தமிட்
டொருகவிச் சிறியனேன் றனைமாத்திரஞ்
சிறினு வோலாரவஞ் சக்காரி
யெனவுலகு செப்புவ தடக்கவசமோ
யாயே யெனப்பிறவி நோயே
தவிர்த்தருள நீயே யலாதுமிலையே
யாஹர சிவாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (9)

வையத்தி லேபொரு ளவாக்கொண்டு
மற்றையரை மருவியா சிக்காமலும்
வந்தநின் மெய்யடி யவர்க்கலா
லீதல்பணி மற்றுளோர்க் கிசையாமலுஞ்
செய்யவேன் மங்கையர்கண் மையலி
லகப்பட்டு சிந்தைநைந் துழலாமலுந்
தெரிசித் துனைப்பரவ லன்றியே
னையதெய்வ சிந்தனை யிழைக்காமலும்
பையவரு வினையறுத் தின்னுமொரு
வன்னையுத ரத்துருப் பண்ணாமலும்
பூமாலை யீரைந்தும் நின்றன்மேற்
சொற்றனன் பாண்டிநா டாண்டவடிவே
லையனைத் தந்தமீ னுள்கயற்
கண்ணிநின் சரணமர ணாகவருள்வா
யரஹர சிவாயவோம் பரதேவ
தாவமுத வல்லிமா தேவியுமையே. (10)

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ விநாயகக்கடவுள் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

நிதிபயிலும் பவளநிற மேனிக் குன்றை
நிராமயத்தைப் பராபரத்தை நிகரின் மூலப்
பதிபயில்பங் கயவிதழோ நாலுஞ் சூழ்ந்து
பரவநடு விலங்குபிர ணவத்தை யன்பாய்த்
துதிபணுவ ருளத்தமுதைத் துரியா தீதச்
சோபிதத்தை யளத்தரிய சுகாநந் தத்தைக்
கதியளிக்குங் கற்பகத்தைக் கடியார் சோலைக்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (1)

உரமருவுந் தருவர்தமக் காற்று மற்பொன்
னுலகிழிந்திப் பூவினிற்கா ழியனைப் போற்ற
விரைமலிபூங் காவனத்துக் குறுநீ ரின்றி
வெயிலதனுற் கருகிடமிக் கிலேச மாகித்
தரமலிசிற் றுண்டிவைத்து நிவேதித் தேற்றுஞ்
சதமகற்காய்ச் சலதிசிலம் படக்கும் வள்ளற்
காமருவு குண்டிகைநீர் கவிழச் செய்து
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (2)

ஃயிலகுங் கைலாய கிரியின் கண்ணே
யன்பொடுமா தவர்தருமாங் கனியை யன்று
மையிலகுங் கண்டன்றன் கரத்தி லேந்தி
மாநிலத்தை வலம்வருவோர்க் கீவ தாக
வையிலகும் வேற்கடவுட் குரைத்த போது
மகிழ்ந்தரனைத் திரிதரமும் வலமாய் வந்து

கையிலருங் கனியதனைவாங்கி யுண்டு
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே (3)

அடல்வலிபெற் றுளவனலா சூரன் றன்னை
யமுதெனத்தன் றுதிக்கையினா லள்ளி யுண்ண
விடவனைமா லயன்முதலோர் தந்தம் மேட்டில்
வெந்தணலாய்க் கொளுத்துகையில் விழைவார் செம்பொற்
குடமுறதழுந் தனவுமையா ளாறுகைச் சூட்டக்
கொடுமைதவிர்த் தேகுளிரச் செய்தெஞ் ஞான்றுங்
கடலொலிநீத் திடுமறையோர் வேத கோஷ்டக்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (4)

முன்னொருநா ளெப்படைக ளானு மாற்றன்
மூவர்களா னும்முடிவின் வரந்தா தாபாற்
சொந்தமுடன் கொண்டிந்த்ரா தியரை யெல்லாந்
துயர்க்கடலி லமிழ்த்தவர்க் கபய மீந்து
விந்தமெனும் புயவயமாச் சூரன் றன்னை
வெள்ளியகொம் பொன்றொடித்து வீசிக் கொன்று
கந்தனுக்கு முந்தவந்தே னெந்தை யென்னுங்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (5)

கெடவசுர குலமறுத்த கார்த்தி கேயன்
கிருபையுடன் கிஞ்சுகவாய்க் குறமின் பக்க
நடமாடு வயோதிகனாய்த் தினைமாத் தேனுந்
தான்புசித்துச் சுனைநீரை மாந்தி வேட
மடமானைத் தழுவுதற்கு நினைக்கும் போது
மதகளிறாய்ப் பிளிறிவந்து மயிலோ னெண்ணங்

கடவாது முடித்தருளுங் கணமார் சோலைக்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (6)

கோடுகொண்டு மாபதிவாழ் கைலா யத்திற்
கூறுமறை யைந்தெனுமா பார தத்தை
யேடுநக மாய்க்கொண்டன் றெழுதி னானை
யென்னையாஞ் சித்திபுத்தி யிருவர் நாப்பண்
பீடுபெற நின்றானைப் பிழையில் லானை
பிரணவத்துட் பொருளானைப் பிறங்கு ரூதுக்
காடுறுசே ருவியுடு வதிர மோதுங்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (7)

வடித்திடுவேற் காளமுழை வாளஞ் சாபம்
வநசமும்பின் னிடுமருமோனைக் குமையைப் பார்த்துத்
தொடுத்தபெருங் கோபமொடு யிழித்துச் சொல்லுந்
தொல்லுலகில் வஃலேர்துரை மகளா தாக
வெடுத்திடுகச் செனனமெனச் சினந்து நால்வா
யிருகையினு லாங்குறுபுத் தகத்தை வாரிக்
கடுத்தலையார் கவியினில்விட் டெறிந்த வையன்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (8)

பண்டுவெள்ளி மலையசைத்த வரக்க னென்பாய்ப்
பரமனிடம் பெற்றுவரு மிலிங்கந் தன்னைக்
கொண்டிலங்கை செல்லாது தவிர்க்கத் தேவர்
குறைபுகலத் தொழுகுலத்துச் சிறுவ னாகிச்
சண்டன்வரு விடுவேலான் கரத்திற் பெற்றுச்
சமர்விளைத்தம் மன்னனுக்கு வருளே செய்தோன்

கண்டவர்க டங்கண்வினை நீறுஞ் சோலைக்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (9)

விடையானைப் பல்கோடி யண்ட மாக
விளங்குவனை வெள்ளியகொம் பானைப் பூதப்
படையானைப் பைங்கடுக்கை யறுகும் வில்வம்
பயில்பிறையுந் தும்பையெருக் காறுந் துன்னுஞ்
சடையானைத் தந்தையெனத் தா ன்கொண் டானைத்
தமிழ்முனிக்குக் குருவானோன் றன்முன் னோனைக்
கடையானைக் கடிகமலக் கயங்கள் மேவுங்
களரியில்வாழ் கணபதியைக் கருது வாமே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

சீரிலகும் பிறைச்சடிலப் பெம்மா னீன்ற
நிற்குணத்தைத் தற்பரத்தை நிகரில் வாழ்வைப்
பாரிலகுஞ் சமயநெறிக் கடங்கா மோனப்
பரவடிவைப் பங்கயம்பம் பரமு மஞ்சும்
வாரிலகு முலையுமையா ளேந்திக் கைமேல்
மகிழ்ந்தமுத்த மிடுநிதியை மருக்க டப்பந்
தாரிலகும் பன்னிரண்டு தடந்தோட் குன்றைத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (1)

உரத்தானை யுள்ளொளியாய் விளங்கு வானை
ஒன் றிரண்டு மூன்றுநான் கைந்தா றானைத்

திரத்தானைத் தேவர்கலி தீர்த்திட் டானைத்
தேன்பிலிற்றுந் தாரானைத் தெவ்வ ரஞ்சும்
வரத்தானைக் கிரவுஞ்ச கிரியின் மீது
வடிசுடர்வே லெறிந்தானை வயங்கு மாறட்
சரத்தானைச் சகலமுமே தானா னானை
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (2)

முந்தவருங் கணபதிபின் முளைத்தான் றன்னை
முமலமறு முப்பதினா யிரமி ரட்டிக்
கந்தவனா விருடியருக் கருள்செய் தானைக்
கதிர்மதியு மானானைக் ககன மோங்கும்
விந்தகிரி யடக்குமுனிக் காசான் றன்னை
வெளியானைச் சுழியானை வேதத் தானைச்
சந்ததமும் பணிவருளக் கமலத் தானைத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (3)

பஞ்சவர்ணக் குக்குடத்தின் றுவசத் தானைப்
பன்னிருகை யானையிராப் பகலா னானை
மஞ்சுவர்ணத் திருமாலின் மருகன் றன்னை
மாறுபட்ட சமணர்கரு வறுத்திட் டானை
நஞ்சஞ்சு விழிக்குறமின் பாகத் தானை
நவவீரர் சூழுமயிற் பரியி னானைத்
தஞ்சமென்பார்க் கருள்பெரிய விழியான் றன்னைத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (4)

புவியானைப் புனலானைக் கனலா னானைப்
புகலரிய வளிவெளியு மாகி னானைக்

கவியானைக் கவியிலுறும் பயனா னானைக்
கருதுவா ருளத்தானைக் கருதா ருள்ளங்
குவியானைக் குஞ்சரியாள் பாகத் தானைக்
குவலயத்தை வெறியேறி வலம்வந் தானைச்
சவியானைச் சர்வவியா பகமா னானைத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (5)

பனிமதியுந் தலைவனமும் பணியும் பூணும்
பரனருளும் பாக்கியத்தைப் பணிவோ ருள்ளக்
கனியமுதைச் செழுந்தேனைக் கண்டைப் பாகைக்
காச்சியபாற் றீஞ்சுவையைக் கன்னற் சாற்றை
இனியில்லாக் களிமதுரக் கடலை யென்ற
னிதயமெழுங் குருமணியை யின்ப வாழ்வைத்
தனிமுதலைத் தற்பரத்தைச் சாட்குண் யத்தைத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (6)

அடியெடுத்துக் கொடுத்தருண கிரிநா தன்ற
னமிழ்தினிய வருட்புகழைக் கேட்பதற்கு
மடியிருட்குண் டலமிலகு செவியீ ராறு
வயங்கிடவே படைத்தானை மலைக ளஞ்சித்
துடிதுடிக்கச் சிறையறுத்த தோளா னுற்ற
துயரகற்றிச் சுவர்க்கநக ரருள்செய் தானைத்
தடிகொடியின் னிடுமிடையா ரருகி லோங்கத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (7)

எத்தகையோர் தமக்குமுத்தி கொடுக்கு மீசன்
இமயநகத் தனையிருவர்க் கிட்ட மோங்க

முத்தவிழு நகையரும்ப முகத்தால் வேண்டு
முத்திதனைக் கொடுத்தானை முனையிற் சூரன்
கொத்தவிழு முடிதுணித்த குமரன் றன்னைக்
கொடியிடியா ளிடமொராங் கொண்டான் றன்னைத்
தத்தலையார் கடற்புவியிற் றிலக மாகுந்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (8)

அம்பரமே யதனிலெழு வமுதே நீட்டா
வாரணமே யாரணத்துட் பொருளே யோங்குஞ்
செம்பவளக் குன்றேநற் றிருவே ஞானச்
செழுஞ்சுடரே தவமுடிவே திதிக்குந் தேனே
வெம்பிணிதீர்த் தருண்மருந்தே மிகுபே ரின்பம்
விளைநிலமே யரனுடற் கூடல் வேந்தே
சம்பரமார் சரவணத்திற் கிடந்தான் றன்னைத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (9)

நேமிதிருத் துளவணியு நெடியோ னுந்தி
நீரோருகத்தி லெழுவானை நெஞ்சங் காந்திப்
பூமியிற்கந் தவரையினிற் சிறைசெய் தானைப்
போதனும்பின் னிடப்புவனம் படைத்தான் றன்னை
வாமிகளிப் புறுவானை வடிவே லானை
வலாரிமுடி சிதறவளை யெறிந்திட் டானைச்
சாமிக்குச் சாமியெனுஞ் சாமி யானைத்
தருவனத்து ளிருவிழியாற் றரிசித் தேனே. (10)

திருச்சிற்றம்பலம்.

68194

துருவாசர்

## தோத்திரம்

குருகுநிறக் கரியரியின் னழுமேதோ
வெனக்குலையக் கோச்சென் றெப்பின்
முருகுவிரி பாரிசாத விருக்கங்கொண்
டிம்பர்வைத்து முதல்வன் மூல
வுருவினைத்தா பித்தேற்றித் தவமிகப்பெற்
றொருநடங்கண் டுளமிக் கார்வம்
பெருகுமளித் துருவாச முனிவர்பிரான்
பொன்னடியாம் பேணு வாமே.

## தோத்திரத்திரட்டு

முற்றிற்று.

Madras : The Guardian Press, Mount Road.